*பிரஸார் பாரதி*
*அகில இந்திய வானொலி, சென்னை-4*
*03 11 2025 MONDAY 7.15 PM*
*வணக்கம், ஆகாஷவாணி – செய்திகள்*

*தலைப்புச் செய்திகள்*

- *பீகார் சட்டப்பேரவைக்கு முதற்கட்டமாக தேர்தல் நடைபெறவுள்ள 121 தொகுதிகளில் பிரச்சாரம் உச்சகட்டத்தை எட்டியுள்ளது.*
- *குடும்ப அரசியல் ஜனநாயகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது என்று காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. சசி தரூர் கூறியுள்ளார்.*
- *ராஜஸ்தானில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர், 10 பேர் காயமடைந்தனர்.*
- *தான்சானியா அதிபராக திருமதி. Samia Suluhu Hassan இன்று பதவியேற்றார்.*
- *உலக கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் Narayanan Sunilduth Lyna இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*>>>>><<<<<*

*பீகார் சட்டப்பேரவைக்கு முதல்கட்டமாக வரும் வியாழக்கிழமை தேர்தல் நடைபெறவுள்ள 121 தொகுதிகளில் பிரச்சாரம் உச்சகட்டத்தை எட்டியுள்ளது.*

*பிஜேபி, ஐக்கிய ஜனதா தளம். ராஷ்ட்ரிய ஜனதா தளம், காங்கிரஸ் ஆம் ஆத்மி, ஜன் சுராஜ் உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் இந்த தொகுதிகளில் இறுதிகட்ட வாக்குசேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.*

*பிரதமர் திரு. நரேந்திர மோடி, Saharsa-வில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.*

*நாட்டு நலனில் எதிர்க்கட்சிகளுக்கு அக்கறையில்லைஎன்று அப்போது அவர் குற்றம் சாட்டினார்.*

*பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியைப் பொறுத்தவரை, வளர்ச்சிக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்து செயல்பட்டு வருவதாக அவர் கூறினார்.*

*பீகாரின் வளர்ச்சிக்காக மத்திய மாநில அரசுகள் நிறைவேற்றிய திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.*

*இந்த தேர்தலில் தங்கள் கூட்டணி வெற்றிபெறும் என்றும் திரு. நரேந்திர மோடி நம்பிக்கை தெரிவித்தார்.*

காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி. பிரியங்கா காந்தி, Sonbarsa-வில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு பேசினார்.

பீகாரை ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு, வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை என்று அவர் குறை கூறினார்.

வளர்ச்சியை பற்றி பேசாமல், பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி, எதிர்க்கட்சித் தலைவர்களை குறை கூறி வருவதாக திருமதி. பிரியங்கா காந்தி தெரிவித்தார்.

ராஷ்ட்ரிய ஜனதா தளம் தலைவர் திரு. தேஜஸ்வி யாதவ், பாட்னாவில் செய்தியாளர்களிடம் பேசுகையில், தங்கள் கூட்டணி ஆட்சிப் பொறுப்பேற்றால், தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும் என்று உறுதியளித்தார்.

>>>>><<<<<

இதற்கிடையே, பீகார் சட்டப்பேரவை தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்காக உறுதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

மாநிலம் முழுவதும் பறக்கும் படையினர் மேற்கொண்டு வரும் கண்காணிப்பு நடவடிக்கைகள் காரணமாக, இதுவரை, 108 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கண்காணிப்பு நடவடிக்கைகளை தொடர்ந்து தீவிரப்படுத்துமாறு தேர்தல் பார்வையாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தை நெறிமுறை மீறல் தொடர்பான புகார்களை பொதுமக்கள் C-vigil செயலியில் தெரிவிக்குமாறும் தேர்தல் ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>><<<<<

குடும்ப அரசியல் ஜனநாயகத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது என்று காங்கிரஸ் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. சசிதரூர் கூறியுள்ளார்.

சர்வதேச ஊடகத்திற்காக எழுதியுள்ள கட்டுரையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

குடும்ப அரசியலே தகுதியாக இருக்கும் பட்சத்தில் சிறந்த நிர்வாகத்தை அளிக்க இயலாது என்றும் திரு. சசி தரூர் அந்தக் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

*இதற்கிடையே, திரு. சசி தரூரின் இந்த கட்டுரை, குடும்ப அரசியல் எவ்வாறு வணிகமாயமாக்கப்பட்டுள்ளது என்பதை எடுத்துரைப்பதாக உள்ளது என்று பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு. Shehzad Poonawalla கூறியுள்ளார்.*

*செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியில் இதனை தெரிவித்த அவர், இந்த கட்டுரையை எழுதியதற்காக திரு. சசி தரூருக்கு பாராட்டு தெரிவித்துக் கொள்வதாக கூறினார்.*

>>>>><<<<<

*நாடுமுழுவதும் வரும் வெள்ளிக்கிழமை ஆயிரத்து 400-க்கும் மேற்பட்ட ஹாக்கிப் போட்டிகள் நடைபெறவுள்ளதாக மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா கூறியுள்ளார்.*

*இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 100 ஆண்டுகால ஹாக்கி கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக இந்த போட்டிகள் நடைபெறுவதாக கூறினார்.*

*550க்கும் மேற்பட்ட மாவட்டங்களில் இந்தப் போட்டிகளை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.*

*ஹாக்கி குறித்து இளையோரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திரு. மன்சுக் மாண்டவியா கூறினார்.*

>>>>><<<<<

*ஒடிசா மாநிலத்திற்கு நடப்பு நிதியாண்டிற்கான ஊரக உள்ளாட்சி மானியமாக 342 கோடி ரூபாயை மத்திய அரசு விடுவித்துள்ளது.*

*15வது நிதி ஆணையத்தின் பரிந்துரையை ஏற்று, இந்த நிதி விடுவிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.*

>>>>><<<<<

*போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிராக மாணவர்கள் ஒருங்கிணைந்து போராட வேண்டியதன் அவசியத்தை குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வலியுறுத்தியுள்ளார்.*

*கேரள மாநிலம், கொல்லத்தில் உள்ள கல்லூரியின் வைரவிழா கொண்டாட்ட நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அவர் பேசினார்.*

*மாணவர்கள் ஒழுக்கத்தை முழுமையாக கடைபிடிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.*

*சுதந்திரத்தை யாரும் தவறாக பயன்படுத்தக்கூடாது என்றும் அவர் வலியுறுத்தினார்.*

நாட்டின் கல்வி வளர்ச்சியில் கேரளா முக்கியப் பங்கு வகிப்பதாகவும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

>>>>><<<<<

ராஜஸ்தானில் இன்று நேரிட்ட சாலை விபத்தில் 13 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்தனர்.

ஜெய்ப்பூர் அருகே சரக்கு வாகனம் அடுத்தடுத்து, 17 வாகனங்கள் மீது மோதியதில் இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

சரக்கு வாகனம் கட்டுப்பாட்டை இழந்து வேகமாக சென்றதே விபத்துக்கு காரணம் என்றும் காவல்துறை தெரிவித்துள்ளது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடி, தலா 2 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவு செய்துள்ள அவர், காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும் என்றும் கூறியுள்ளார்.

>>>>><<<<<

மின்னணுப் பொருட்களின் முனையமாக குஜராத் உருவெடுத்து வருவதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

பிரதமர் திரு. நரேந்திர மோடி மற்றும் குஜராத் முதலமைச்சர் திரு. புபேந்திர பட்டேல் தொலைநோக்குடன் மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக இது சாத்தியமானதாக குஜராத் அரசின் செய்திகுறிப்பு தெரிவிக்கிறது.

சர்வதேச தரத்திற்கு இணையான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக, தொழில் முதலீட்டுக்கு உகந்த மாநிலமாக குஜராத் திகழ்கிறது என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திட்டங்கள் குறித்த காலத்திற்குள் நிறைவேற்றப்படுவது உறுதி செய்யப்பட்டு வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>><<<<<

ஹரியானாவில் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகுவதாக அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு. Sampath Singh அறிவித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே-வுக்கு இதுதொடர்பாக எழுதியுள்ள கடிதத்தில், காங்கிரஸ் பலவீனமடைந்து வருவதன் காரணமாக தாம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

ஆறு முறை சட்டப்பேரவை உறுப்பினராகவும், இரண்டு முறை அமைச்சராகவும், ஒருமுறை எதிர்க்கட்சித் தலைவராகவும் பதவிவகித்த அவர். கடந்த 2009ஆம் ஆண்டு லோக்தள் கட்சியிலிருந்து விலகி காங்கிரஸில் இணைந்தார்.

>>>>><<<<<

தான்சானியா அதிபராக திருமதி. Samia Suluhu Hassan இன்று பதவியேற்றார்.

Dodoma-வில் உள்ள ராணுவ மைதானத்தில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில் அவர் இப்பொறுப்பினை ஏற்றுக் கொண்டதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவிக்கின்றன.

அதிபர் பதவிக்கான தேர்தலில் 98 சதவீத வாக்குகளை பெற்று அவர் வெற்றிபெற்றார்.

இதற்கிடையே, இந்த தேர்தல் நடைபெற்ற முறை குறித்து சர்வதேச பார்வையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வெளிப்படைத்தன்மையுடன் இந்த தேர்தல் நடைபெறவில்லை என்றும் தேர்தல் தொடர்பான வன்முறைச் சம்பவங்களில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாகவும் சர்வதேச பார்வையாளர்கள் கூறியுள்ளனர்.

பல்வேறு எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள் சிறையில் அடைக்கப்பட்டதையும், தேர்தலில் போட்டியிட தடை விதிக்கப்பட்டதையும் சுட்டிக்காட்டி, சர்வதேச பார்வையாளர்கள் இக்கருத்தை தெரிவித்துள்ளனர்.

>>>>><<<<<

உலக கோப்பை செஸ் போட்டியில் இந்தியாவின் Narayanan Sunilduth Lyna இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

கோவாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் முதல்சுற்று ஆட்டத்தில் அவர், தென்னாப்பிரிக்காவின் Steven Rojas-ஐ வென்றார்.

>>>>><<<<<

உலக கிரிக்கெட் கோப்பையை வென்ற இந்திய மகளிர் அணிக்கு 51 கோடி ரூபாய் பரிசுத்தொகையை கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம் அறிவித்துள்ளது.

>>>>><<<<<

தமிழகத்திற்கு எதிரான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் விதர்பா அணி வலுவான நிலையில் உள்ளது.

*கோவையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மூன்றாம் நாளான இன்று தமிழக அணி, இரண்டாவது இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 6 ரன் எடுத்துள்ளது.*

*முன்னதாக, விதர்பா அணி முதல் இன்னிங்ஸில் 501 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.*

*>>>>><<<<<*

*ஆசிய கோப்பை ஸ்கேட்டிங் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Shreyasi Joshi வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*ஜப்பானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் Freestyle பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

*>>>>><<<<<*

*எகிப்தில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் ஆர்யன் லஷ்மன்-ஜெர்மனியின் Cedric Stanke இணை பட்டம் வென்றது.*

*>>>>>end<<<<<*